| XI STD | 2018 - 2019 |
|---|---|
| ஒரு மதிப்பெண் | 11 -ஆம் வகுப்பு] **தமிழ்** [நேரம் : 1-00 மணி<br>(மொத்த மதிப்பெண்கள் : 40) |
| தேர்வு எண் : 1 | உரைநடை : (1) பேச்சுமொழியும், கவிதைமொழியும் (2) இயற்கை வேளாண்மை<br>செய்யுள் : யுகத்தின் பாடல் (முதல்) ஐங்குறுநூறு (வரை)<br>இலக்கணம் : மொழி (முதல்) மெய்ம்மயக்கம் (வரை)<br>துணைப்பாடம் : (1) ஆறாம் திணை (2) யானை டாக்டர் |

## பகுதி - அ

**I. பலவுள் தெரிக : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :** 10 x 1 = 10

1. 'வான் பொய்த்தது' என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள் ..................
   (அ) மழை பெய்யவில்லை (ஆ) வானம் இடித்தது
   (இ) மின்னல் வெட்டியது (ஈ) வானம் என்பது பொய்யானது

2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ..................
   (அ) மண்புழு (ஆ) இயற்கை உரங்கள் (இ) ஊடுபயிர் (ஈ) இவை மூன்றும்

3. பாயிரம் இல்லது .................. அன்றே
   (அ) காவியம் (ஆ) பாடல் (இ) பனுவல் (ஈ) கவிதை

4. மாநகர் என்பதன் இலக்கணக் குறிப்பு ..................
   (அ) பண்புத்தொகை (ஆ) வினைத்தொகை
   (இ) உவமைத்தொகை (ஈ) உரிச்சொற்றொடர்

5. இயற்கைக்கும், மனிதர்க்கும் தொப்புள் கொடி ..................
   (அ) மரம் (ஆ) வீடு (இ) உணவு (ஈ) மழைத்துளி

6. ஐங்குறுநூறு பாடலின் ஆசிரியர் ..................
   (அ) பேயனார் (ஆ) ஓரம்போகியார் (இ) கபிலர் (ஈ) அம்மூவனார்

7. சிற்றிலக்கியங்களின் மொத்த வகை ..................
   (அ) 98 (ஆ) 97 (இ) 96 (ஈ) 86

8. தமிழின் முதல் இலக்கண நூல் ..................
   (அ) திருக்குறள் (ஆ) நளவெண்பா (இ) தொல்காப்பியம் (ஈ) நன்னூல்



9. தன் இனத்தையும், மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம் கூடில்லாத பறவை என்று கூறியவர் ..................
   (அ) இரசூல்கம்சதோவ் (ஆ) ஜி.யு. போப் (இ) பாரதியார் (ஈ) திருவள்ளுவர்

10. ஐங்குறுநூறு பிரித்தறியும் முறை ..................
   (அ) ஐந்து + நூறு (ஆ) ஐந்து + குறுமை + நூறு
   (ஆ) ஐங்குறுமை + நூறு (ஈ) ஐந்து + குறுமை நூறு

## பகுதி - ஆ

**II. பலவுள் தெரிக :** 10 x 1 = 10

11. 'யானை டாக்டர்' சிறுகதையின் ஆசிரியர் ..................
   (அ) இந்திரன் (ஆ) ஜெயமோகன் (இ) வில்வரத்தினம் (ஈ) முத்துலிங்கம்

12. மொழிமுதல் எழுத்துகள் .................. ஆகும். (அ) 21 (ஆ) 23 (இ) 25 (ஈ) 22

13. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க ..................
   (அ) டமாரம், இங்ஙனம் (ஆ) அன்னம், கிண்ணம்
   (இ) ரூபாய், லட்சாதிபதி (ஈ) றெக்கை, அங்ஙனம்

14. தவறான இணையைத் தேர்வு செய்க ..................
   (அ) மொழி + ஆளுமை = உயிர் + உயிர்
   (ஆ) தமிழ் + உணர்வு = மெய் + உயிர்
   (இ) கடல் + அலை = உயிர் + மெய்
   (ஈ) மண் + வளம் = மெய் + மெய்

15. கலைச்சொற்களுக்கு தமிழாக்கம் தருக ..................
   (அ) Journalist (ஆ) Aesthetic

16. (அ) கா - சோலை
   (ஆ) மஞ்ஞை - மயில்
   (இ) மண்டலம் - பிரிவு
   (ஈ) தரளம் - தருவார்

   மேற்கூறிய சொற்களில் எது சரியாக பொருந்தியுள்ளது ..................
   (அ) 'அ' மட்டும் (ஆ) 'ஆ, இ' இரண்டும்
   (இ) 'அ, ஈ' இரண்டும் (ஈ) 'அ, ஆ' இரண்டும்

[PTO

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17. கீழ்க்காணும் வடமொழிச் சொற்களுக்கு தமிழாக்கம் தருக ..................

(அ) சங்கீதம் இசை (ஆ) சாகரம் கடல்

18. கீழ்க்காணும் சொற்களுக்குரிய பொருளை எழுதி தொடரில் அமைத்து எழுதுக ..........

(அ) குரை - குறை

19. கருப்பட்டி - பனங்கற்கண்டு போன்றவை ..................

(அ) மதிப்புக்கூட்டுப் பொருள் (ஆ) நேரடிப்பொருள்

(அ) 'அ' மட்டும் சரி (ஆ) 'ஆ' மட்டும் சரி

(இ) இரண்டும் சரி (ஈ) 'அ' தவறு 'ஆ' சரி

20. யானையை குறிக்கும் வேறு சொற்கள் யாவை ? ..............

(அ) அரி (ஆ) குஞ்சரம் (இ) பரி (ஈ) ஆ

**III. பின்வரும் சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு வரைக :** 6 x 1 = 6

21. (அ) ஐந்தும் முற்றும்மை (ஆ) கோடல் தொழிற்பெயர்

(இ) செங்கயல் பண்புத்தொகை (ஈ) மஞ்சளையும், கொண்டலும் எண்ணும்மை

(உ) கண்ணி வழிச்சொல் (ஊ) அகிற்புகை ஆறாம் வேற்றுமை தொகை

**IV. பிரித்து புணர்ச்சி இலக்கணம் தருக :** 3 x 1 = 3

22. (அ) செங்கயல் (ஆ) பொதுச்சிறப்பு (இ) அணிந்துரை

23. பகுபத உறுப்பிலக்கணம் தருக : 2 x 1 = 2

(அ) அலர்ந்து (ஆ) வைத்தார்

**V. இலக்கண வினாக்கள் சுருக்கமாக எழுதுக :** 2 x 1 = 2

24. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் எத்தனை ? 24

25. மெய்ம்மயக்கம் .....2..... வகைப்படும்.



**VI. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி ; ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக :** 1 x 4 = 4

26. மீன்கள்கோடி கோடி சூழ வெண்ணிலாவே ! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே !
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே ! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ ? வெண்ணிலாவே !
கூகை ஆந்தைபோல் நீயும் வெண்ணிலாவே ! பகல்
கூட்டினில் உறங்குவாயோ ? வெண்ணிலாவே !
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே ! நீயும்
பாரில் வர அஞ்சினையோ ? வெண்ணிலாவே !

— ஆசிரியர் : கவிமணி

**VII. தமிழாக்கம் தருக :** 3 x 1 = 3

27. (அ) Organic Farming. இயற்கை வேளாண்மை

(ஆ) Weaver Bird. தூக்கணாங் குருவி

(இ) Value Added Product மதிப்புக்கூட்டுப் பொருள்



https://www.trbtnpsc.com/2018/06/latest-plus-one-11th-study-materials-tamil-medium-english-medium-new-syllabus-based.html

www.Padasalai.Net

www.TrbTnpsc.com

| XI STD | 2018 - 2019 |
| --- | --- |
| ஒரு மதிப்பெண் | 11 -ஆம் வகுப்பு] **தமிழ்** [நேரம் : 1-00 மணி<br>(மொத்த மதிப்பெண்கள் : 40) |
| தேர்வு எண் : 2 | உரைநடை : (3) மலை இடப்பெயர்கள் ஓர் ஆய்வு (4) தலைமை செயலகம்<br>செய்யுள் : காவடிச்சிந்து (முதல்) புறநானூறு (வரை)<br>இலக்கணம் : பகுபத உறுப்பிலக்கணம், புணர்ச்சி விதிகள்<br>துணைப்பாடம் : (3) வாடிவாசல் (4) இனிக்கும் இன்கவின் |

பகுதி - அ

10 x 1 = 10

**I. பலவுள் தெரிக : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

1. 'காவடிச் சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் ..........

(அ) பாரதிதாசன் (ஆ) அண்ணாமலையார் (இ) முருகன் (ஈ) பாரதியார்

2. திருக்குறளின் சிறப்பினை விளக்கப் பல புலவர்கள் பாடிய பாடல்களால் தொகுக்கப்பட்ட நூல் ..........

(அ) காலமறிதல் (ஆ) இடமறிதல் (இ) திருவள்ளுவமாலை (ஈ) குடையர்

3. துன்பப்படுபவர் ..........

(அ) தீக்காயம் பட்டவர் (ஆ) தீயினால் சுட்டவர்

(இ) பொருளைக் காக்காதவர் (ஈ) நாவைக் காக்காதவர்

4. ஒப்புரவு என்பதன் பொருள் ..........

(அ) ஊருக்கு உதவுவது (ஆ) அடக்கமுடையது

(இ) பண்புடையது (ஈ) செல்வமுடையது

5. தமிழரின் வாழ்வியல் கருவூலமாகக் கருதப்படுவது ..........

(அ) அகநானூறு (ஆ) புறநானூறு (இ) நற்றிணை (ஈ) திருக்குறள்

6. பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர் ..........

(அ) குறும்பர் (ஆ) ஐதாப்பு (இ) தோடர் (ஈ) கோட்டா

7. சங்ககாலப் பெண்பால் புலவர்களுள் ஒருவர் ..........

(அ) வெள்ளி வீதியார் (ஆ) காரைக்காலம்மையார் (இ) மணிமேகலை (ஈ) ஆண்டாள்



8. 'மஞ்சு விரட்டு' பற்றிப் பேசும் சி.சு. செல்லப்பாவின் புதினம் ..........

(அ) சுதந்திர தாகம் (ஆ) உசிலனூர் அம்பி (இ) வாடிவாசல் (ஈ) பிச்சிலங்கோட்டை

9. 'பெரும்புகழ்'- இலக்கணக் குறிப்பு ..........

(அ) வினைத்தொகை (ஆ) அடுக்குத்தொடர் (இ) தொழிற்பெயர் (ஈ) பண்புத்தொகை

10. பொருந்தாத ஒன்றைச் சுட்டுக ..........

(அ) தாமஸ் ஆல்வா எடிசன் (ஆ) நோம் சோம்ஸ்கி

(இ) ஐன்ஸ்டீன் (ஈ) ஸ்டீபன் ஹாக்கிங்

பகுதி - ஆ

10 x 1 = 10

**II. பலவுள் தெரிக :**

11. Catalyst, Pancreas - கலைச்சொல் தருக ..........

(அ) வினையூக்கி, கணையம் (ஆ) மென்பொருள், முதுகுத்தண்டு

(இ) சுரப்புநீர், கடத்தி (ஈ) உளவியல், உயிர்ப்பு

12. WHO என்பதன் விரிவாக்கம் ..........

(அ) உலக வர்த்தக மையம் (ஆ) உலக நல நிறுவனம்

(இ) உலக வணிக அமைப்பு (ஈ) உலகப் பொருளாதார மன்றம்

13. 'பெருங்கலம்' என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க ..........

(அ) ஈறுபோதல், இனமிகல் (ஆ) ஈறுபோதல், ஆதிநீடல்

(இ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல் (ஈ) ஈறுபோதல், இனையவும்

14. 'காலங்கடந்தவன்' - எவ்வகை புணர்ச்சி ..........

(அ) பண்புப்பெயர் (ஆ) முற்றியலுகரம் (இ) மகரஈற்று (ஈ) பூப்பெயர்

[PTO

https://www.trbtnpsc.com/2018/06/latest-plus-one-11th-study-materials-tamil-medium-english-medium-new-syllabus-based.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



15. நாளமில்லாச் சுரப்பி உற்பத்தி செய்யும் ஹார்மோன் ..................

(அ) தைராய்டு (ஆ) பீட்டா செல்கள் (இ) இன்சுலின் (ஈ) ரத்தஅழுத்தம்

16. ஒருவேந்தன் எதிர்சென்று அவன் தன்மையைக் கூறிப் புகழ்வது ——— துறை ஆகும்.

(அ) பொருண்மொழிக்காஞ்சி (ஆ) நற்றாய் கூற்று (இ) அரசர் (ஈ) இயன்மொழித்

17. 'நீலகேசி' என்பது ஐஞ்சிறும் காப்பியங்களுள் ஒன்று ............... பாக்களால் ஆனது.

(அ) ஒண்பா (ஆ) விருத்தப் (இ) வஞ்சிப் (ஈ) கலிப்

18. 'அறிவியல் தமிழர்' என்று போற்றப்படுபவர் .................

(அ) பெ.நா. அப்புசாமி (ஆ) கவிமணி (இ) புலமைபித்தன் (ஈ) கல்கி

19. 'விஞ்ஞானி' எனும் தலைப்பிலான இக்கவியரங்க கவிதை ........... தலைமையில் அரங்கேற்றப்பட்டதாகும்.

(அ) பாரதியார் (ஆ) வாணிதாசன் (இ) மீரா (ஈ) கண்ணதாசன்

20. சராசரி மூளை ................... கிலோ எடை இருக்கும்.

(அ) இரண்டு (ஆ) நான்கு (இ) ஒன்றரைக் (ஈ) ஒன்று

**III. பின்வரும் சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு வரைக :** **5 x 1 = 5**

21. (அ) கரும்பும் மலரும்

(ஆ) நிலைஇய

(இ) எறிகல்

(ஈ) சுடச்சுட

(உ) புகாஅர்



**IV. புணர்ச்சி விதி தருக :** **5 x 1 = 5**

22. (அ) மன்னுயிர் (ஆ) காட்சியழகு (இ) பூப்பந்து

(ஈ) நெட்டிலை (உ) பழத்தோல்

**V. பகுபத உறுப்பிலக்கணம் தருக :** **3 x 1 = 3**

23. (அ) அறிந்தோர் (ஆ) சூழ்ந்த (இ) காட்டிய

**VI. பின்வரும் திணையை விளக்குக :** **1 x 2 = 2**

24. பாடாண்திணை என்றால் என்ன ?

**VII. பின்வரும் திருக்குறளில் அமைந்துள்ள அணியை மட்டும் எழுதுக : (விளக்கம் தேவையில்லை)** **5 x 1 = 5**

25. (அ) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

(ஆ) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(இ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

(ஈ) தீயினால் சுட்டப்புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

(உ) சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.



https://www.trbtnpsc.com/2018/06/latest-plus-one-11th-study-materials-tamil-medium-english-medium-new-syllabus-based.html

**XI STD** | **2018 - 2019**

**ஒரு மதிப்பெண்**

**தேர்வு எண் : 3**

11 -ஆம் வகுப்பு] **தமிழ்** [நேரம் :1-00 மணி

(மொத்த மதிப்பெண்கள் : 40)

உரைநடை : (5) தமிழகக் கல்வி வரலாறு (6) ஆனந்தரங்கர் குறிப்பு
செய்யுள் : பிள்ளைக்கூடம் (முதல்) திருக்குறள் (வரை)
இலக்கணம் : படைப்பாக்க உத்திகள், பா இயற்றப் பழகலாம்
துணைப்பாடம் : (5) இதழாளர் பாரதி (6) பிம்பம்

பகுதி - அ

**I. பலவுள் தெரிக : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :** **10 x 1 = 10**

1. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் ______

(அ) குறுந்தொகை (ஆ) நற்றிணை (இ) அகநானூறு (ஈ) ஐங்குறுநூறு

2. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் ஆகிய சொற்கள் தரும் பொருள் ______

(அ) நூல் (ஆ) ஓலை (இ) எழுத்தாணி (ஈ) தாள்

3. 'கல்வி அழகே அழகு' என்று கூறும் நூல் ______

(அ) நன்னூல் (ஆ) புறநானூறு (இ) சிலப்பதிகாரம் (ஈ) நாலடியார்

4. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ______

(அ) 9 (ஆ) 3 (இ) 27 (ஈ) 13

5. சீறாப்புராணம் ______ படலங்களை கொண்டது.

(அ) 91 (ஆ) 92 (இ) 93 (ஈ) 94

6. 'நெடுந்தொகை' என்று அழைக்கப்படும் நூல் ______

(அ) புறநானூறு (ஆ) நற்றிணை (இ) அகநானூறு (ஈ) சிலப்பதிகாரம்

7. 'வளைஇ'- இன் இலக்கணக் குறிப்பு ______

(அ) வினைத்தொகை (ஆ) பண்புத்தொகை
(இ) இரட்டைகிளவி (ஈ) சொல்லிசையளபெடை

8. 'பிம்பம்' என்னும் சிறுகதையின் ஆசிரியர் ______

(அ) அய்க்கண் (ஆ) வல்லிக்கண்ணன் (இ) பிரபஞ்சன் (ஈ) நாஞ்சில்நாடன்



9. 'மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து' ______ நினை.

(அ) முகக்குறிப்பை அறிந்தவரை (ஆ) மறதியால் கெட்டவர்களை
(இ) சொல்லேர் உழவரை (ஈ) எண்ணியதை எண்ணியவரை

10. 'ஏமம்' என்பதன் பொருள் ______ ஆகும்.

(அ) பாதுகாப்பு (ஆ) நினை (இ) துன்பம் (ஈ) இன்பம்

பகுதி - ஆ

**II. பலவுள் தெரிக :** **10 x 1 = 10**

11. 'கெடுக'- இன் இலக்கணக்குறிப்பு ______

(அ) பண்புத்தொகை (ஆ) தொழிற்பெயர்
(இ) அடுக்குத்தொடர் (ஈ) வியங்கோள் வினைமுற்று

12. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது ______

(அ) காய்முன் நேர் (ஆ) மாமுன் நேர் (இ) காய்முன் நிரை (ஈ) கனி முன்நிரை

13. 'வதுவை' என்பதன் பொருள் ______

(அ) திருமணம் (ஆ) மலை (இ) யானை (ஈ) கடல்

14. 'உறுபகை'- இன் இலக்கணக்குறிப்பு ______

(அ) வினைத்தொகை (ஆ) ஈற்றுப்போலி (இ) பெயரெச்சம் (ஈ) உரிச்சொற்தொடர்

15. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது ______

(அ) மொழிபெயர்ப்பாளர் (ஆ) இந்தியாவின் பெப்பிசு
(இ) உலகநாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை (ஈ) தலைமை துவிபாஷி

[PTO

16. 'அகவலோசை பெற்று வருவது' ..........

(அ) வெண்பா (ஆ) கலிப்பா (இ) ஆசிரியப்பா (ஈ) வஞ்சிப்பா

17. 'நிழல்போலத் தொடர்ந்தான்' இது எவ்வகை உவமை ..........

(அ) வினை (ஆ) பயன் (இ) மெய் (ஈ) வடிவம்

18. 'Idols, Religion'- கலைச்சொல் தருக ..........

(அ) சிலைகள், மதம் (ஆ) தத்துவம், மதம்

(இ) அறிவியல், மருத்துவம் (ஈ) வேலை, நின்று

19. 'ஒட்டுப்போடாத ஆகாயம்போல இந்த உலகமும் ஒன்றேதான்' - இக்கவிதையில் பயின்று வருவது ..........

(அ) உருவகம் (ஆ) உவமை (இ) உள்ளுறை (ஈ) இறைச்சி

20. 'சக்ரவர்த்தினி' இதழின் ஆசிரியர் ..........

(அ) பாரதிதாசன் (ஆ) கவிமணி (இ) வெ.இராமலிங்கர் (ஈ) பாரதியார்

**III. பின்வரும் திணை (அ) துறையை விளக்கம் தருக :** 1 x 2 = 2

21. குறிஞ்சிதிணை **(அல்லது)** மகள் நிலை உரைத்தல் துறை.

**IV. பகுபத உறுப்பிலக்கணம் தருக :** 4 x 1 = 4

22. (அ) மறுத்து (ஆ) விடுதல் (இ) நெருங்கின் (ஈ) இரங்கி

23. **பிரித்து புணர்ச்சி விதி கூறுக :** 2 x 2 = 4

(அ) மனையென (ஆ) அரும்பொருள்



**V. இலக்கணக்குறிப்பு வரைக :** 4 x 1 = 4

24. (அ) தவமும், ஈகையும் (ஆ) எறிவாள் (இ) பிழையா (ஈ) குறிப்புணர்வார்

**VI. பின்வரும் திருக்குறளில் அமைந்துள்ள அணியை மட்டும் எழுதுக : (விளக்கம் தேவையில்லை)** 2 x 1 = 2

25. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

26. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

**VII. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி ; ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக :** 1 x 4 = 4

27. பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன் ;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

ஆசிரியர் : பாரதியார்

---------



https://www.trbtnpsc.com/2018/06/latest-plus-one-11th-study-materials-tamil-medium-english-medium-new-syllabus-based.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| XI STD | 2018 - 2019 |
|---|---|
| ஒரு மதிப்பெண் | 11 -ஆம் வகுப்பு] **தமிழ்** [நேரம் : 1-00 மணி<br>(மொத்த மதிப்பெண்கள் : 40) |
| தேர்வு எண் : 4 | உரைநடை : (7) காலத்தை வென்ற கலை (8) காற்றில் கலந்த பேரோசை<br>செய்யுள் : ஆத்மாநாம் கவிதைகள் (முதல்) பதிற்றுப்பத்து (வரை)<br>இலக்கணம் : கலைச்சொல்லாக்கம், ஆக்கப்பெயர்கள்<br>துணைப்பாடம் : (7) இசைத்தமிழர் இருவர் (8) சிந்தனைப் பட்டிமன்றம் |

பகுதி - அ

**I. பலவுள் தெரிக : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :** 15 x 1 = 15

1. 'மதுசூதனன்'- என்ற இயற்பெயரைக் கொண்டவர் ..........

(அ) வாணிதாசன் (ஆ) புரட்சிக்கவிஞர் (இ) ஆத்மாநாம் (ஈ) பெரியார்

2. திருவாசகத்தில் .......... திருப்பதிகங்கள் உள்ளன.

(அ) 52 (ஆ) 51 (இ) 38 (ஈ) 37

3. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று ..........

(அ) சாழல் (ஆ) சிற்றில் (இ) சிறுதேர் (ஈ) சிறுமறை

4. 'ஜனப் பிரளயம்'- என்னும் வடமொழிச் சொல் உணர்த்தும் தமிழ்ச்சொல் ---- ஆகும்.

(அ) மக்கள் அலை (ஆ) உயிர் அலை (இ) மக்கள் அவை (ஈ) மக்கள் வெள்ளம்

5. எது 'கவிதைக் கிரீடம் '- என்று திரிகூடராசப்பக் கவிராயர் கூறுகிறார் ..........

(அ) காளத்தி மலை (ஆ) குற்றாலக்குறவஞ்சி

(இ) குற்றாலக்கோவை (ஈ) நித்திலக்கோவை

6. 'மாண்ட தவளை '- இன் இலக்கணக்குறிப்பு ..........

(அ) வினையெச்சம் (ஆ) தொழிற்பெயர் (இ) பண்புத்தொகை (ஈ) பெயரெச்சம்

7. தஞ்சைப் பெரியகோவிலை கட்டியவர் ..........

(அ) பாண்டிய மன்னன் (ஆ) செங்குட்டுவன்

(இ) இராசராச சோழன் (ஈ) இராஜேந்திரசோழன்



8. 'அயன்'- என்பதன் பொருள் .......... ஆகும்.

(அ) பிரம்மன் (ஆ) விஷ்ணு (இ) சிவபெருமான் (ஈ) புத்தர்

9. 'ஒதுக, வாழி'- இன் இலக்கணக்குறிப்பு ..........

(அ) பண்புத்தொகை (ஆ) வியங்கோள் வினைமுற்று (இ) எண்ணும்மை (ஈ) முற்றும்மை

10. பாரதிதாசனின் .......... நாடகத்துக்கு 'சாகித்திய அகாதெமி' விருது வழங்கப்பட்டது.

(அ) குயில் (ஆ) பிள்ளைத்தமிழ் (இ) இருண்ட வீடு (ஈ) பிசிராந்தையார்

11. .......... என்பது சந்த வேறுபாடு ஆகும்.

(அ) பாடல்கள் (ஆ) இசைகள் (இ) வண்ணம் (ஈ) திணை

12. அழகும், அறிவும், இளமையும் வாய்ந்தவன் - யார் யாரிடம் கூறியது ? ......

(அ) அமைச்சர் மன்னரிடம் (ஆ) அமைச்சர் கவிஞரிடம்

(இ) மன்னர் அமைச்சரிடம் (ஈ) மன்னன் அமுதவல்லியிடம்

13. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து புறம் சார்ந்த நூல்.

காரணம் : சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

(அ) கூற்று சரி, காரணம் தவறு (ஆ) இரண்டும் சரி

(இ) இரண்டும் தவறு (ஈ) கூற்று தவறு காரணம் சரி

14. 'பாடாண் திணை'- என்பது ..........

(அ) கைக்கிளைக்கு புறனானது (ஆ) மன்னனின் வீரம் பற்றி கூறுகிறது

(இ) ஆண்மகனின் போர்ச் சிறப்பை பாடுவது

(ஈ) மன்னர்களின் வெற்றி சிறப்பை பாடுவது

15. 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன்வந்து பாயுது காதினிலே'- என்று பாடிய கவிஞர் ..........

(அ) பாரதிதாசன் (ஆ) கவிமணி (இ) பாரதியார் (ஈ) நாமக்கல் கவிஞர்

[PTO

https://www.trbtnpsc.com/2018/06/latest-plus-one-11th-study-materials-tamil-medium-english-medium-new-syllabus-based.html

## பகுதி - ஆ

**II. பலவுள் தெரிக :** 6 x 1 = 6

16. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க ______

(அ) காவலாளி (ஆ) ஆசிரியர் (இ) உதவியாளர் (ஈ) மேலாளர்

17. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம் ______

(அ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில் (ஆ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில்

(இ) அடையாறுப் பாலத்தின் சுவரில் (ஈ) அடையாறு பாலத்தின் சுவற்றில்

18. Equality, Debate தமிழாக்கம் ______

(அ) உத்திகள், தொழிற்சங்கம் (ஆ) பெயர்கள், நடைமுறைகள்

(இ) சமத்துவம், பட்டிமன்றம் (ஈ) புனைபெயர், ஆளுமை

19. 'Ship'- என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயர் ______

(அ) மலிவு (ஆ) இருட்டு (இ) வெளிச்சம் (ஈ) நாவாய்

20. 'Personality, Emotion'- என்னும் ஆங்கிலச் சொற்குரிய தமிழ்பெயர் ______

(அ) நெகிழி, அளவு (ஆ) ஆளுமை, மனக்கிளர்ச்சி

(இ) உடற்பயிற்சி, தோட்டக்கலை (ஈ) நடுத்தரம், உறிஞ்சுக்குழல்

21. 'நம்ரதாகே சாகர்'- என்னும் பாடலை பாடியவர் ______

(அ) இளையராஜா (ஆ) ஏ.ஆர். இரஹ்மான்

(இ) சீர்காழி கோவிந்தராஜ் (ஈ) மகாத்மா காந்தி

**III. பின்வரும் சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு வரைக :** 5 x 1 = 5

22. (அ) குரைகடல் (ஆ) நல்லாடை (இ) உழுதுழுது

(ஈ) ஒழிதல் (உ) ஒரீஇய



**IV. பகுபத உறுப்பிலக்கணம் தருக :** 5 x 1 = 5

23. (அ) உண்டான் (ஆ) செய்வான் (இ) அயர்ந்து (ஈ) ஈட்டினார் (உ) ஆழ்க

**V. பிரித்து புணர்ச்சி இலக்கணம் வரைக :** 5 x 1 = 5

24. (அ) உலகனைத்தும் (ஆ) கற்பொடி (இ) நீரோடை

(ஈ) மண்ணுடை (உ) புறந்தருதல்

**VI. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி ; ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக :** 1 x 4 = 4

25. சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

ஆசிரியர் : நாமக்கல் கவிஞர்

------------



https://www.trbtnpsc.com/2018/06/latest-plus-one-11th-study-materials-tamil-medium-english-medium-new-syllabus-based.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| XI STD | 2018 - 2019 |
|---|---|
| ஒரு மதிப்பெண் | 11 -ஆம் வகுப்பு] **தமிழ்** [நேரம் :1-00 மணி<br>(மொத்த மதிப்பெண்கள் : 40) |
| தேர்வு எண் : 5 | உரைநடை : (9) சித்தர் உலகம் (10) தாகூரின் கடிதங்கள்<br>செய்யுள் : ஜப்பானிய ஹைக்கூ (முதல்) மனோன்மணியம் (வரை)<br>இலக்கணம் : நிறுத்தற் குறிகள், மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்<br>துணைப்பாடம் : (9) காஞ்சனை - முன்னுரை (10) செல்வி |

பகுதி - அ

**I. பலவுள் தெரிக : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :** 12 x 1 = 12

1. 'யாரே உனைப்போல அனுதினம் உழைப்போர் ?' இது எவர்மொழி ..........

(அ) வாய்க்கால் (ஆ) நாங்கூழ் (இ) புல் (ஈ) நடராசன்

2. 'கடிநகர்'- இன் இலக்கணக்குறிப்பு ..........

(அ) பண்புத்தொகை (ஆ) வினைத்தொகை

(இ) உம்மைத்தொகை (ஈ) உரிச்சொல்தொடர்

3. சென்னைப் பல்கலைக்கழகம் யாருக்கு ராவ்பகதூர் பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளது ..........

(அ) பாரதியார் (ஆ) சுந்தரனார் (இ) சுந்தரமூர்த்தி (ஈ) அறிஞர் அண்ணா

4. 'செல்வி' என்னும் சிறுகதையின் ஆசிரியர் ..........

(அ) புதுமைப்பித்தன் (ஆ) அய்க்கண் (இ) நர்த்தகிநடராஜ் (ஈ) காமராஜ்

5. 'சிறுகதையின் மன்னர்' என்று போற்றப்படுபவர் ..........

(அ) புதுமைப்பித்தன் (ஆ) கல்கி (இ) ஆனந்தவிகடன் (ஈ) மு. மேத்தா

6. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல் ..........

(அ) மனோன்மணீயம் (ஆ) இரகசிய வழி (இ) நூல்தொகை (ஈ) திருவிதாங்கூர்



7. பூஜை, விஷயம்,, உபயோகம் என்பன முறையே ..........

(அ) பயன்பாடு. வழிபாடு, செய்தி (ஆ) வழிபாடு, செய்தி, பயன்பாடு

(இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி (ஈ) செய்தி, வழிபாடு, பயன்பாடு

8. தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் 'தமிழன்னை விருது' பெற்றவர் ..........

(அ) சுந்தரர் (ஆ) சுரதா (இ) அப்துல் ரகுமான் (ஈ) இளையராஜா

9. 'சாதி பிரிவினிலே தீயை மூட்டுவோம் ' என்பது யார் கூற்று ..........

(அ) பாம்பாட்டிச் சித்தர் (ஆ) திருமூலர் (இ) பட்டினத்தார் (ஈ) சிவவாக்கியர்

10. தன் புண்ணியம் அனைத்தையும் தானமாக வழங்கியவர் ..........

(அ) கண்ணன் (ஆ) கன்னன் (இ) தருமன் (ஈ) பிரமன்

11. 'கொள்' என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் ..........

(அ) கொள்க (ஆ) கொள்ளுதல் (இ) கொள்ளும் (ஈ) கொள்வோன்

12. வில்லிபாரத்தில் 'சூரியனின் தோன்றல்' என்று குறிப்பிடப்படுபவர் ..........

(அ) கண்ணன் (ஆ) அர்சுனன் (இ) கன்னன் (ஈ) தருமன்

பகுதி - ஆ

**II. பலவுள் தெரிக :** 8 x 1 = 8

13. நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக :

(அ) நான் படிக்கிறேன் என்றான் பாபு.

(ஆ) ஒழுக்கமுடைமை குடிமை என்றார் திருவள்ளுவர்.

[PTO

https://www.trbtnpsc.com/2018/06/latest-plus-one-11th-study-materials-tamil-medium-english-medium-new-syllabus-based.html

14. கற்றேன் என்பாய் கற்றாயா வெறும்

காகிதம் தின்பது கல்வியில்லை. இவ்வடிகளில் பயின்று வருவது ..............

(அ) சீர்மோனை, அடிமோனை (ஆ) அடிஎதுகை, அடிமோனை

(இ) சீர்மோனை, அடிஎதுகை (ஈ) அடிமோனை, அடிஇயைபு

15. Tragedy, Wisdom என்பதன் தமிழாக்கம் ..............

(அ) ஆன்மா-ஆத்மா (ஆ) மாண்பு - சித்த மருத்துவம்

(இ) மாயை-மயக்கம் (ஈ) துன்பம், அறிவு

16. 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாடியவர் ..............

(அ) பாரதியார் (ஆ) இன்குலாப் (இ) குருதேவ் (ஈ) த.நா. குமாரசுவாமி

17. 'ஆசிலா, ஒவா' இலக்கணக்குறிப்பு ..............

(அ) பண்புத்தொகை (ஆ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

(இ) அடுக்குத்தொடர் (ஈ) பெயரெச்சம்

18. 'கூவும் குயிலும், கரையும் காகமும்' தொடரில் இடம்பெற்ற மரபு ..............

(அ) வினைமரபு (ஆ) பெயர் மரபு (இ) ஒலி மரபு (ஈ) இசை மரபு

19. தகுந்த நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக.

கதிரவன் தன் பாட்டியிடம் நான் படிக்கிறேன் என்று கூறினான்.

20. 'கொள்'- என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்க.

(அ) கொள்க (ஆ) கொள்ளுதல் (இ) கொள்ளும் (ஈ) கொள்வோன்



**III. பின்வரும் சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு வரைக :** 5 x 1 = 5

21. (அ) நெறுநெறு

(ஆ) நவில்க

(இ) செங்கை

(ஈ) புழுக்களும், பூச்சியும்

(உ) வீழருவி

**IV. பகுபத உறுப்பிலக்கணம் தருக :** 3 x 2 = 6

22. (அ) அளிப்பாய் (ஆ) பெற்றேன் (இ) முளைத்த

**V. புணர்ச்சி விதி தருக :** 3 x 2 = 6

23. (அ) தடந்தேர் (ஆ) ஞாயிற்றொளி (இ) உழுதுழுது

**VI. தமிழாக்கம் தருக :** 3 x 1 = 3

24. (அ) Madurai is known as city of temples.

(ஆ) Indian people, always dislike violence.

(இ) Television is one of the modern wonders of electronics.

-----------



https://www.trbtnpsc.com/2018/06/latest-plus-one-11th-study-materials-tamil-medium-english-medium-new-syllabus-based.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# 2018 - 2019

## 11 -ம் வகுப்பு : ஒரு மதிப்பெண் : விடைகள்

# தமிழ்

### தேர்வு எண் – 1

I. 1. (அ) 2. (ஆ) 3. (இ) 4. (ஈ) 5. (ஈ) 6. (அ) 7. (இ) 8. (இ) 9. (அ) 10. (ஆ)

II. 11. (ஆ) 12. (ஈ) 13. (ஆ) 14. (இ) 15. (அ) இதழாளர் (ஆ) அழகியல் 16. (ஈ)

17. (அ) இசை (ஆ) கடல் 18. (அ) நாய் குரைக்கும் ; ஆசிரியர் என்குறையை தீர்த்துவைத்தார்.

19. (அ) 20. (ஆ)

III. 21. (அ) முற்றும்மை ஆ) தொழிற்பெயர் (இ) பண்புத்தொகை (ஈ) எண்ணும்மை

(உ) விளிச்சொல் (ஊ) ஆறாம் வேற்றுமைத்தொகை V. 24. 24 25. 2

VII. (அ) இயற்கை வேளாண்மை (ஆ) தூக்கணாங்குருவி (இ) மதிப்புக்கூட்டுப்பொருள்

### தேர்வு எண் – 2

I. 1. (ஆ) 2. (இ) 3. (ஈ) 4. (அ) 5. (ஆ) 6. (இ) 7. (அ) 8. (இ) 9. (ஈ) 10. (ஆ)

II. 11. (அ) 12. (ஆ) 13. (அ) 14. (இ) 15. (இ) 16. (ஈ) 17. (ஆ) 18. (அ) 19. (ஈ) 20. (இ)

III. 21. (அ) எண்ணும்மை (ஆ) சொல்லிசையளபெடை (இ) வினைத்தொகை

(ஈ) அடுக்குத்தொடர் (உ) இசைநிறை அளபெடைகள்

VII. 25. (அ) உவமையணி (ஆ) சொற்பின்வரும் நிலையணி (இ) பிறிதுமொழிதல் அணி

(ஈ) வேற்றுமைஅணி (உ) உவமை அணி

### தேர்வு எண் – 3

I. 1. (ஆ) 2. (அ) 3. (ஈ) 4. (இ) 5. (ஆ) 6. (இ) 7. (ஈ) 8. (இ) 9. (ஆ) 10. (அ)

II. 11. (ஈ) 12. (ஆ) 13. (அ) 14. (ஈ) 15. (இ) 16. (இ) 17. (ஈ) 18. (அ) 19. (ஆ) 20. (ஈ)

V. 24. (அ) எண்ணும்மை (ஆ) வினைத்தொகை (இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

(ஈ) வினையாலணையும் பெயர் VI. 25. பிறிதுமொழிதல் அணி 26. உருவக அணி

### தேர்வு எண் – 4

I. 1. (இ) 2. (ஆ) 3. (அ) 4. (ஈ) 5. (ஆ) 6. (ஈ) 7. (இ) 8. (அ) 9. (ஆ) 10. (ஈ)

11. (இ) 12. (அ) 13. (ஆ) 14. (இ) 15. (இ)

II. 16. (ஆ) 17. (அ) 18. (இ) 19. (ஈ) 20. (ஆ) 21. (ஈ)

VI. 25. (அ) வினைத்தொகை (ஆ) பண்புத்தொகை (இ) அடுக்குத்தொடர்

(ஈ) தொழிற்பெயர் (உ) சொல்லிசையளபெடை

### தேர்வு எண் – 5

I. 1. (ஈ) 2. (ஈ) 3. (ஆ) 4. (இ) 5. (அ) 6. (அ) 7. (ஆ) 8. (இ) 9. (அ) 10. (ஆ) 11. (ஈ) 12. (இ)

II. 13. (அ) 'நான் படிக்கிறேன்' என்றான் பாபு. (ஆ) 'ஒழுக்கமுடைமை குடிமை' என்றார் திருவள்ளுவர்.

14. (அ) 15. (ஈ) 16. (அ) 17. (ஆ) 18. (அ)

19. கதிரவன், தன் பாட்டியிடம், 'நான் படிக்கிறேன்' என்று கூறினான். 20.

III. 21. (அ) இரட்டைக்கிளவி (ஆ) வியங்கோள் வினைமுற்று (இ) பண்புத்தொகை

(ஈ) எண்ணும்மை (உ) வினைத்தொகை

VI. 24. (அ) கோயில் நகரம் என்று அறியப்படுவது மதுரை ஆகும்.

(ஆ) இந்திய மக்கள் வன்முறையை எப்பொழுதும் வெறுப்பர்.

(இ) தொலைக்காட்சி என்பது மின்னியல் துறையின் புத்தகம் புதிய அதிசயம்.

https://www.trbtnpsc.com/2018/06/latest-plus-one-11th-study-materials-tamil-medium-english-medium-new-syllabus-based.html